TAMILTH ALL 1 TNadu_01 C KARNAN Time



**பொன்மொழி**

எதையும் ஒரு திட்டத்தோடு மட்டும் தொடங்காதீர்கள். செயலோடு தொடங்குங்கள்.

– பிளாரன்ஸ்

**இணையம்:** அரசு சார்ந்த பணிகளுக்குத் தேவையான விண்ணப்பங்களை https://www.tn.gov.in/forms/ இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சுகாதாரத் துறை உள்ளிட்ட துறைகள் வாரியாகவும், ஆங்கில எழுத்து வாரியாகவும் பல்வேறு விண்ணப்பங்கள் உள்ளன.

**பொதுஅறிவு:** 2010–20 காலகட்டத்தில் உலக அளவில் காடுகளின் பரப்பை அதிகரிக்கும் நாடுகளின் பட்டியலில் சீனா, ஆஸ்திரேலியாவுக்கு அடுத்ததாக இந்தியா உள்ளது என்று ஐ.நா. சபையின் உணவு, வேளாண்மை நிறுவனம் வெளியிட்ட உலக காடுகள் வள மதிப்பீடு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்துக்கு

# துணைவேந்தரை நியமிக்க அரசுக்கு அதிகாரம்

**● சட்டப்பேரவையில் மசோதா அறிமுகம்**

■ சென்னை

தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களை நியமிக்கும்போது, மாநில அரசின் பரிந்துரைப்படி, பல்கலைக் கழகங்களின் வேந்தரான ஆளுநர் நியமிக்கும் நடைமுறை இருந்தது.

இந்நிலையில், சமீபகாலமாக ஆளுநரே நேரடியாக துணை வேந்தர்களை நியமிக்கும் நடை முறை உள்ளது. இதற்கு மாநில அரசு சார்பில் கடும் எதிர்ப்புத் தெரி விக்கப்பட்டு வருகிறது.

அண்டை மாநிலங்களான கர் நாடகா, ஆந்திரா, தெலங்கானா மற்றும் குஜராத்தில் துணைவேந் தர்களை நியமிக்கும் அதிகாரம் மாநில அரசிடமே உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு தமிழ கத்திலும் பல்கலைக்கழக துணை வேந்தர்களை நியமிக்கும் அதி காரத்தை அரசுக்கு வழங்கும் வகை யில், பல்கலைக்கழக சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, சென்னைப் பல் கலைக்கழகம் உட்பட 13 பல் கலைக்கழகங்களின் சட்டங்களில் திருத்தம் செய்யப்பட்டு, சட்டப் பேரவையில் உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடியால் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட் டது. தொடர்ந்து, அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக துணைவேந்தரை நியமிக்கும் அதிகாரத்தை, தமிழக அரசுக்கும் வழங்கும் சட்டத்திருத்த முன்வடிவை சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, அறிமுகம் செய்தார்.

இந்நிலையில் சட்டப் பேரவை யில் நேற்று தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரை நிய மிக்க, தமிழக அரசுக்கு அதிகாரம் அளிக்கும் சட்டத்திருத்த முன் வடிவை அமைச்சர் மா.சுப்பிர மணியன் அறிமுகம் செய்தார்.

அதற்கான நோக்க காரண விளக்க உரையில், குஜராத், தெலங் கானா, கர்நாடக மாநில பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர் நிய மனத்தில் அரசின் அதிகாரம் குறித் தும், அதன் அடிப்படையில் தமிழக அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு சட்டத்திருத்தம்**

மேலும், கூட்டுறவு சங்கங்களின் முறையான ஆளுகையை உறுதி செய்யவும், அதன் மூலம் பொதுநலனைப் பாதுகாக்கவும், முறையான கட்டுப்பாடு, கண்காணிப்புக்கான சட்டத்திருத்த முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

அதேபோல, கூட்டுறவு சங்கத்தில் கையாடல், மோசடியாக பணத்தை தக்க வைத்தல் போன்றவற்றுக்கு, பதவிக்காலம் முடிந்த பின் பெறப்படும் புகார்களின் அடிப்படையில், சங்கத்தின் நிர்வாகம் அல்லது பணியாளர்களுக்கு உடந்தையாக உள்ள வெளியாட்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான சட்ட முன்வடிவும் சட்டப்பேரவையில் அமைச்சர் ஐ.பெரியசாமியால் நேற்று அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த சட்டத்திருத்த மசோதாக் களை அறிமுக நிலையிலேயே எதிர்ப்பதாக அதிமுக சார்பில், செல்லூர் ராஜு சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

**சிறைவாசிகள் விடுவிப்பு**

கள்ளச் சாராயக்காரர்கள், கணினிவெளி சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்கு குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர் கள், விபசாரத் தொழில் குற்ற வாளிகள், மணல் கடத்தல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசைப்பகுதி நில அபகரிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கையை தடுத்தல் சட்டத்தின் 15-வது பிரிவு, மாநில அரசு எந்த நேரத்திலும், தடுப்புக் காவலில் உள்ள எவரையும் குறிப்பிட்ட காலத்துக்கு நிபந்னையின்றி அல்லது அந்த நபர் ஏற்கும் நிபந்தனையின் பேரில் விடுவிக்கவும், விடுவிப்பை ரத்து செய்யவும் வழிவகை செய் கிறது.

தற்போது, அந்த சிறைவாசிகள் ரத்த சொந்தங்களின் திருமணத்தில் பங்கேற்க, உடல் நலமின்மைக்கு சிகிச்சை பெற, நெருங்கிய உறவுகளின் இறப்பில் பங்கேற்க மாநில அரசுக்கு பல்வேறு முறையீடுகள் வந்துள்ளன.

ஆனால், நிர்வாக நடைமுறை காரணமாக அந்த முறையீடு களுக்கு உரிய நேரத்தில் தீர்வு காண முடியவில்லை. இதைத் தவிர்க்கும் வகையில், மாவட்ட அளவிலான அதிகார அமைப்புக்கு, தற்காலிக விடுவிப்புக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் அளிக்க தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. அதன் அடிப் படையிலான சட்ட முன்வடிவை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிமுகம் செய்தார்.

### சட்டப்பேரவை நிகழ்ச்சிகள் முழுவதையும்

# நேரடியாக ஒளிபரப்பு செய்ய பழனிசாமி கோரிக்கை

■ சென்னை

சட்டப்பேரவையில் நேற்று காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில், எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி பேசியதாவது:

அதிமுக ஆட்சியில் காவல் துறை சுதந்திரமாக செயல்பட்டு, சட்டம்- ஒழுங்கு பாதுகாக்கப்பட்ட துடன், தமிழகம் அமைதிப் பூங்கா வாகத் திகழ்ந்தது. மதம், சாதிச் சண்டைகள், கட்டாயப் பஞ்சாயத்து இல்லை. ஆளும் கட்சியின் தலை யீடு அறவே கிடையாது.

2013-ல் காவல் துறைக்கு ஆன் லைனில் புகார் அளிக்கும் முறையை அறிமுகப்படுத்தி னோம். ஆனால், கடந்த சில மாதங் களாக ஆன்லைன் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தமிழகத்தில் மக்கள் தொகைக்கு ஏற்ப காவலர் எண்ணிக் கையை அதிகரிக்க வேண்டும்.

சட்டப்பேரவை நிகழ்ச்சி கள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என திமுக வாக்குறுதி அளித்தது. அதை செயல்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் குறுக்கிட்டு, “நாங்கள் சொன்னது உண்மை. அந்த வாக்குறுதியை நாங்கள் காப்பாற்றி இருக்கிறோம். பேரவை நிகழ்வுகள் தொலைக்காட்சி நிறு வனங்களுக்கு வழங்கப்படுகின் றன. அவற்றை முழுவதுமாகவும், குறைத்தும் வெளியிடுவது அவர்களின் விருப்பம்” என்றார்.

தொடர்ந்து பேரவைத் தலைவர் அப்பாவு பேசும்போது, “தற்போது கேள்வி-நேர நிகழ்ச்சிகள் முழுவதும் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகின்றன” என்றார்.

தொடர்ந்து பேசிய பழனிசாமி, “ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப் பினர்கள் பேசுவது என அனைத்து நிகழ்வுகளையும் தொடக்கம் முதல் இறுதி வரை நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டும்” என்றார்.

அதற்கு பதில் அளித்த பேரவைத் தலைவர் அப்பாவு, “படிப்படியாக பேரவை நிகழ்வுகள் அனைத்தும் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படும்” என்றார்.

# ‘பொறியியல் படிப்புக்கு 10 இடங்களில் கலந்தாய்வு’

■ சென்னை

சட்டப்பேரவையில் கேள்வி நேரத் தின்போது, கலை, அறிவியல் கல்லூரி தொடங்குவது தொடர்பாக சிங்காநல்லூர் எம்எல்ஏ கே.ஆர். ஜெயராம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதில் அளித்த உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன் முடி, “கலை, அறிவியல் கல்லூரி களில் உள்ள 59,500 இடங்களில், 2,350 இடங்கள் காலியாக உள்ளன” என்றார்.

தொடர்ந்து பேசிய, பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, “கலை, அறிவியல் கல்லூரிகளில் அதிக இடங்கள் காலியாக இருப் பதால், அவற்றை நிரப்ப கவுன் சிலிங் நடத்தலாமே?” என்றார்.

இதற்குப் பதில் அளித்த அமைச் சர் க.பொன்முடி, “அரசுக் கல்லூரி களில் விண்ணப்பித்த அனைவருக் குமே வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அரசுக் கல்லூரிகளில் ஆன்லைன் மூலம் கலந்தாய்வு நடத்த கோரிக்கை விடுக்கப்படுகிறது. கடந்த காலங்களில் அண்ணா பல் கலைக்கழகத்தில் நடைபெற்ற கலந்தாய்வுகளில் பல்வேறு குளறு படிகள் கண்டறியப்பட்டுள்ளன.

எனவே, கலை, அறிவியல் கல்லூரிகளில் கலந்தாய்வு நடத்த அவசியமில்லை. பொறியியல் கல்லூரிகளுக்கு 10 இடங்களில் கலந்தாய்வு நடத்துவதற்கான ஆலோசனை நடைபெற்று வருகிறது” என்றார்.

### உழைப்பவர்களுக்கு பாஜக அங்கீகாரம்: திருச்சி சிவா மகன்

■ சென்னை

திருச்சி சிவா எம்.பி.யின் மகன் சூர்யா சிவா திமுகவில் இருந்து விலகி, பாஜக தலைவர் அண்ணாமலை முன்னிலையில் அக்கட்சியில் நேற்று முன்தினம் இரவு இணைந்தார்.

இதுகுறித்து சூர்யா சிவா கூறியதாவது: திமுகவில் எனக்கு உரிய அங்கீகாரம் கிடைக்க வில்லை. அது ஒருபுறம் இருந் தாலும் குடும்ப ரீதியாகவும் ஒரு சில பிரச்சினைகள் இருக்கின்றன. தமிழகத்தில் வளரக்கூடிய கட்சியாக பாஜக இருக்கிறது. உழைக்கிறவர்களுக்கு அங் கீகாரம் கொடுக்கிறார்கள். மாநில தலைவர் அண்ணாமலையின் நடவடிக்கைகளால் ஈர்க்கப்பட்டு பாஜகவில் இணைந்துள்ளேன்.

நான் எந்தப் பதவியும் கேட்கவில்லை. உழைக்கிறேன். அதற்கு உரிய அங்கீகாரம் கொடுங்கள் என்றுதான் கேட்டுள்ளேன். திமுக ஆளும் கட்சியாக வந்த பிறகு உட்கட்சி ஜனநாயகம் இல்லாத சூழல் அதிகமாக உள்ளது.

### கொலை உள்ளிட்ட வழக்குகளில் சிக்கிய

# 19 வழக்கறிஞர்களுக்கு தொழில்புரிய தடை விதிப்பு

■ சென்னை

கொலை, போக்ஸோ, போலி ஆவணங்கள் தயாரித்தல், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் சிக்கிய, 3 பெண் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட 19 வழக்கறிஞர்கள் தொழில்புரிய தடை விதித்து தமிழ்நாடு, புதுச்சேரி பார் கவுன்சில் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு, புதுச்சேரி பார் கவுன்சில் செயலர் சி.ராஜாகுமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கொலை, வன்கொடுமை, போக்ஸோ வழக்குகள், போலி ஆவணங்கள் தயாரித்து மோட்டார் வாகன விபத்து வழக்குகளில் இழப்பீடு பெற்றது, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, குற்ற வழக்கை மறைத்தது, பணியில் இருப்பதை மறைத்தது, சிறைத் தண்டனை பெற்றது, போதைப் பொருள் கடத்தல், போலி வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான வழக்கறிஞர்கள் சென்னையைச் சேர்ந்த ஆதிகேசவன், சதீஷ்குமார், முருகையன், விருமாண்டி, ஈரோடு எழிலரசன், நதியா, திருவண்ணாமலை தினேஷ்பாபு, விருத்தாச்சலம் முத்துராஜ், கன்னியாகுமரி பிரபு, திருவள்ளூர் வேலாநந்தன், ராஜேஷ்கண்ணன், திருப்பூர் பார்த்திபன், சேலம் ராஜா, நாகப்பட்டினம் ஆத்தூர் சுரேந்திரன், ஓசூர் மனோகர ரெட்டி, வி.பாரதி, கே.செல்வி, தருமபுரி பாலக்கோடு எம்.சங்கர், புதுச்சேரி அரியாங்குப்பம் ஜெ.லெனின் ஆகியோர், வழக்கறிஞர்களாக எந்த நீதிமன்றத்திலும் ஆஜராகக்கூடாது என்றும், வழக்கறிஞர்களாக தொழில்புரிய தடை விதித்தும் பார் கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Office of Managing Director, MSME Trade and Investment Promotion Bureau**
**MSME Department, Government of Tamil Nadu**
1st Floor, SIDCO Corporate Office Building, Thiru Vi Ka Industrial Estate, Guindy, Chennai-600032

The following tender proposals may be accessed for appropriate responses

| Sl. | Tendering Authority& Bid Submission Portal & EMD | Subject of Request for Proposal (RfP), date of issue, Bid Due Date (BDD) and time |
|---|---|---|
| 1 | General Manager, M-TIPB (https://www.bharat-electronictender.com) EMD is Rs. 5,00,000/- each (Payable except in cases where the lead bidder is an MSME with a valid UDYAM Certificate) | RFP for Selection of Consultant to Support M-TIPB in Creating Enabling Ecosystems for the growth of MSMEs in Tamil Nadu<br>Date of Issue: 10.05.2022<br>Bid Due Date & Time: 24.05.2022 at 10 AM |

All subsequent communications will be available at the site mentioned above. The RfP notifications will also be available at www.tenders.tn.gov.in. RfPs can be downloaded till BDD and will be opened on the portal https://www.bharat-electronictender.com on the respective BDD. The processes are meant to be end-to-end electronic and all submissions except presentation for the RFPs will be entirely online to the maximum extent possible. The responses could be used for empanelling firms and experts for similar projects in M-TIPB, at the sole discretion of the Tender Accepting Authority.

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம் DIPR/2194/Tender/2022 **General Manager, M-TIPB**

**Government of Tamil Nadu**
**Information Technology Department**
**Tamil Nadu e-Governance Agency (TNeGA)**

**E-TENDER NOTICE**

Online tenders are invited by the Chief Executive Officer (CEO), Tamil Nadu e-Governance Agency (TNeGA), towards **Empanelment of Agencies for Data Entry for TNeGA or any other departments / PSUs of GoTN for a period of 3 years.**

The tender document (RFP) can be downloaded at free of cost from **https://tntenders.gov.in / https://tnega.tn.gov.in** from 10.05.2022, 13:00 hrs.

Pre-bid meeting is scheduled online on 17.05.2022 at 15:30 hrs. through video conference (VC) by TNeGA and the link for the VC can be referred in the RFP.

EMD for an amount of Rs. 5,00,000/- has to be paid through online mode. Last date and time for online submission of bids through https://tntenders.gov.in (e-Tender) is 10.06.2022 till 15:00 hrs. Technical Bid shall be opened online on 10.06.2022 at 15:30 hrs. Bidders are advised to participate in the pre-bid meeting scheduled by TNeGA.

**DIPR /2200/ TENDER / 2022**

**Chief Executive Officer**
**Tamil Nadu e-Governance Agency**

**Government of Tamil Nadu**
**INFORMATION TECHNOLOGY DEPARTMENT**
**TAMIL NADU E-GOVERNANCE AGENCY (TNeGA)**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

**E - TENDER NOTICE**

Online tenders are invited by the Chief Executive Officer (CEO), Tamil Nadu e-Governance Agency (TNeGA), towards **Selection of Implementation Partner to Design, Develop and Implement Tamil Nadu Integrated Services Platform (TNISP) “e-Sevai 2.0”**

The tender document (RFP) can be downloaded at free of cost from https://tntenders.gov.in/, https://tnega.tn.gov.in/ from **10.05.2022, 13:00 hrs.** Pre-bid meeting is scheduled online on **17.05.2022 at 11:30 hrs. throughvideo conference (VC)** by TNeGA and the link for the VC can be referred in the RFP.

EMD for an amount of Rs.8,00,000/- has to be paid through online mode. Last date and time for online submission of bids through https://tntenders.gov.in/ (e-Tender) is **10.06.2022 till 16:00 hrs.** Technical Bid shall be opened online on **10.06.2022 at 16:30 hrs.** Bidders are advised to participate in the pre-bid meeting scheduled by TNeGA.

**Sd/- K.Vijayendra Pandian IAS,**
**Chief Executive Officer**
**Tamil Nadu e-Governance Agency**

DIPR /2192/ Tender / 2022

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

**केनरा बैंक Canara Bank**
भारत सरकार का उपक्रम — A Government of India Undertaking
सिंडिकेट Syndicate

**Premises & Estate Section, Circle Office, #243, St. Mary's Campus, East Veli Street, Madurai - 625 001. Phone : 0452-2337060 / 40. E-mail : pecomdu@canarabank.com**

**Empanelment of Architects, Consultants, Contractors & Suppliers and Service Providers**

Applications are Invited in the prescribed format for Empanelment of Architect, Civil, Electrical and Air Conditioning suppliers / service providers, Civil, Electrical & Interior Furnishing Contractors, Supply, Installation and maintenance of ACs, CCTV System, Fire & Burglar Alarm System, Fire Extinguishers, Glow sign boards, SMF & Tubular Batteries and service providers for shifting of old furniture and records, scrap vendors, AMC for AC, UPS and Inverters, Postal & Courier service, Destruction of old records. For details and prescribed form, please refer our website **www.canarabank.com** or contact our office. Last date to submit the sealed offers is

**before 5.00 P. M on 31.05.2022.**

Further, communications, corrigendum, amendments, if any, will be hosted in Bank's website only. Bank reserves the right to accept / reject the offers received without assigning any reasons whatsoever.

sd/-

**Place : Madurai**
**Date : 09.05.2022**

**Assistant General Manager**
**Madurai Circle**

## டி.வி.எஸ். மோட்டார் கம்பெனி லிமிடெட் TVS

**பதிவு அலுவலகம் :** “சைதன்யா”, எண்.12, காதர் நவாஸ் கான் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை 600 006
**இணையதளம் :** www.tvsmotor.com; **தொலைபேசி :** (044) 28332115, **தொலைநகல் :** (044) 28332113
**மின்னஞ்சல் :** contactus@tvsmotor.com; **CIN :** L35921TN1992PLC022845

அன்பார்ந்த உறுப்பினர்களே,

1. கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபியினால் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2018 மற்றும் அதன் கீழ் உள்ள விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013-ல் பொருந்தக்கூடிய விதிகளின்படி ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் ஆஜராகாமல் காணொளி காட்சி (“VC”) மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஆடியோ விஷுவல் வழிமுறைகள் (“OAVM”) மூலமாக கம்பெனியின் 30-வது வருடாந்திர பொதுக்கூட்டம் **திங்கட்கிழமை 27 ஜூன் 2022 அன்று** நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
2. கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி கம்பெனி அல்லது அவர்களின் சம்பந்தப்பட்ட முதலீட்டு பங்கேற்பாளர்களின் (டெபாசிட்டரி) மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் 30வது வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் 31 மார்ச் 2022-ல் முடிந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகள் (வருடாந்திர அறிக்கை) ஆகியவை மின்னஞ்சல் மூலம் மட்டுமே அனுப்பப்படும். காணொளி காட்சி (“VC”) மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஆடியோ விஷுவல் வழிமுறைகள் (“OAVM”) மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் இணையலாம் மற்றும் பங்கேற்கலாம். வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் நேரத்தில் மின்னணு வாக்குப் பதிவு மூலமாக வாக்களித்தல் அல்லது தொலைதூர மின்னணு வாக்குப் பதிவின் மூலம் பங்கேற்க மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான வழிகாட்டுதல்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் அளிக்கப்படும். கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 103ன் கீழ் குறைந்தபட்ச எண்ணிக்கையை கணக்கிடுவதற்காக காணொளி காட்சி (“VC”) மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஆடியோ விஷுவல் வழிமுறைகள் (“OAVM”) மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் கணக்கிடப்படுவார்கள். கம்பெனியின் இணையதளம் www.tvsmotor.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளான பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளங்கள் முறையே www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் நேஷனல் செக்யூரிட்டிஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் இணையதளம் i.e. www.evoting.nsdl.comல் அறிவிப்பு பதிவேற்றம் செய்யப்படும். (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதிக்காக அளிக்கப்பட்ட முகவர்).
3. காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் கம்பெனி / டெபாசிட்டரியிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாதவர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களின் ஸ்கேன் நகல்களை corpserv@integratedindia.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பி 30வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பின் நகல்கள், வருடாந்திர அறிக்கை மற்றும் அல்லது மின்னணு வாக்குப்பதிவு உள்பட காணொளி காட்சி (“VC”) மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஆடியோ விஷுவல் வழிமுறைகள் (“OAVM”) ஆகியவற்றை மென்பொருளாக பதிவு செய்வதன் மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
   a. தங்களது பெயர், ஃபோலியோ எண், முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்ட கோரிக்கை கடிதம்.
   b. பங்கு சான்றுகளின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின் பக்கம்)
   c. சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட பான் மற்றும்
   d. உறுப்பினரின் ஸ்கேன் பதிவு செய்யப்பட்ட முகவரிக்காக ஓட்டுனர் உரிமை / பாஸ்போர்ட் / வங்கி அறிக்கை / ஆதார் ஆகியவற்றின் சுயசான்றளிக்கப்பட்ட செய்யப்பட்ட நகல்கள்.
4. மின்னணு கிளியரிங் சேவையை தங்கள் வங்கிக் கணக்குகள் மூலமாக நேரடியாக ஈவுத்தொகையைப் பெறுவதற்கான ஆணையை புதுப்பிக்காத காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் கீழ்க்கண்ட விவரங்கள் / ஆவணங்களை, மேற்கண்ட பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை மின்னஞ்சல் மூலம் corpserv@integratedindia.inக்கு அனுப்பி மின்னணு முறையில் அவர்களின் வங்கி கணக்கிற்கு ஈவுத்தொகையை நேரடியாக பெறுவதற்கு அவர்களது மின்னணு வங்கி ஆணையை பதிவு செய்ய வேண்டும்.
   a. ஈவுத் தொகை பெறக்கூடிய வங்கி கிளை, பெயர் மற்றும் வங்கி கணக்கு வகை
   b. கோர் வங்கி தீர்வுகளை அமல்படுத்திய பின்னர் அவர்களுடைய வங்கியால் ஒதுக்கப்பட்ட வங்கி கணக்கு எண்
   c. 11 டிஜிட் ஐஎப்எஸ்சி குறியீடு மற்றும்.
   d. ஒரு வேளை பங்குகளை இணைத்து வைத்திருந்தால் முதலில் வைத்திருப்பவர் அல்லது உறுப்பினரின் பெயர் கொண்ட ரத்தான காசோலையின் சுயசான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்
5. டீமேட் முறையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் அவர்களின் டெபாசிட்டரியிடம் அவர்களது மின்னஞ்சல் முகவரிகளை புதுப்பிக்க வேண்டும்.
6. காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் தங்கள் பங்குகளை டீமேட் முறைக்கு மாற்றி அதன் பயன்களை பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.
7. மின்னஞ்சல் முகவரியை புதுப்பித்தல் செயல்முறையைத் தொடங்க டீமேட் கணக்கில் பங்குதாரர்களுக்கு பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்களில் எஸ்எம்எஸ் அனுப்ப நிறுவனம் NSDL மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் இந்த வசதியைப் பெறவும், அதற்கேற்ப அவர்களின் மின்னஞ்சல் முகவரிகளைப் புதுப்பிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கம்பெனிகள் விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி மற்றும் கம்பெனியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தகவல் மற்றும் நலனுக்கான மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

சென்னை
மே 9, 2022

இயக்குனர் குழு ஆணையின்படி
K.S. ஸ்ரீநிவாஸன்
கம்பெனி செயலாளர்

## சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்

**பதிவு அலுவலகம் :** “சைதன்யா”, எண்.12, காதர் நவாஸ் கான் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை 600 006
**இணையதளம் :** www.sundaram-clayton.com; **தொலைபேசி :** (044) 28332115, **தொலைநகல் :** (044) 28332113
**மின்னஞ்சல் :** corpsec@sundaramclayton.com; **CIN :** L35999TN1962PLC004792

அன்பார்ந்த உறுப்பினர்களே,

[illegible]

சென்னை
மே 9, 2022

இயக்குனர் குழு ஆணையின்படி
[illegible]
கம்பெனி செயலாளர்

**IGARASHI MOTORS INDIA LTD.**

Regd.Office: Plot No. B-12 to B-15, Phase II, MEPZ- SEZ, Tambaram, Chennai - 600045
CIN : L29142TN1992PLC021997, Phone : +91-44-42298199 / 22628199
E-mail : investorservices@igarashimotors.co.in / website : www.igarashimotors.com

**Notice to Shareholders regarding transfer of Equity Shares of the Company to Investor Education and Protection Fund (IEPF)**

Notice is hereby given in compliance with the provisions of Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2016 (Rules) and Section124 (6) of the Companies Act, 2013, which came into effect from 07th September, 2016 and subsequent amendments, the Company is mandated to transfer all such shares respect of which dividends has not been paid or claimed by the shareholders for the seven consecutive years or more to Investor Education and Protection Fund (IEPF) Demat Account. Such shares shall be transferred within a period of thirty days of becoming due to be transferred to the Fund.

Based on the above Rules, the Company will now transfer the unpaid / unclaimed **Final Dividend** and corresponding shares for the financial year **2014-15** to IEPF Demat Account in view of the reason that periods of seven years have since elapsed after the said dividends were declared and paid.

Individual notices have already been sent to respective shareholders at their latest available address in the Company/ Registrar and Share Transfer Agent (RTA) records on **March 31, 2022** inter alia providing the details of shares being transferred to IEPF Demat Account and list of such shareholders along with their folio numbers or DP ID-Client ID is also displayed on the website of the Company (www.igarashimotors.com)

The concerned shareholders are requested to claim the unpaid/unclaimed final dividend amount(s) on or before **August 01, 2022** failing which the unclaimed dividend and corresponding shares including all benefits accruing on such shares, if any, shall be transferred lo IEPF Suspense account.

It may be noted that to comply with the aforesaid regulations, the Company will initiate the action without any further notice on or after **August 31, 2022** as under.

1. In case of shares held in Demat mode - by transfer of shares directly to Demat account of the IEPF through the Depositories of shareholders concerned.
2. In case of shares held in Physical mode - by issuing new duplicate share certificate in lieu of Original share certificate and thereafter transfer the same to the Fund by converting into Demat mode through Depositories.

Upon issue of such new shares certificates, the original share certificates registered in their names will stand automatically cancelled and be deemed non-negotiable. It may however be noted that no such further action would be required in respect of shares held in Demat form.

In case the concerned shareholders wish to claim the shares and dividend after transfer to IEPF Demat Account, a separate application can be made to the IEPF Authority, in Form IEPF- 5, as prescribed under the Rules and the same is available at IEPF website i.e www.iepf.gov.in

For further information/request to claim the unpaid/unclaimed dividend(s), the concerned shareholders may contact the RTA of the Company at:

**M/s. Cameo Corporate Services Ltd,** Unit: Igarashi Motors India Limited, Subramanian Building, 5th Floor, No.1 Club House Road, Chennai 600002, Phone:044 4002 0700, Email:investor@cameoindia.com

Place : Chennai
Date : May 10, 2022

For **Igarashi Motors India Limited**
**P Dinakara Babu**
**Company Secretary**

CH-CH_M